மாவட்டத் தேர்தல் அதிகாரி அலுவலகம்
புதுச்சேரி

எண்.1209/மா.தே.அ /டி5/2016. புதுச்சேரி,நாள்: 15-09-2016

## <u>செய்திக்குறிப்பு</u>

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் **01.01.2017** - ஐ தகுதி நாளாகக் கொண்டு, புதுச்சேரி மாவட்டத்திலுள்ள சட்டமன்றத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியலில் புதிய வாக்காளர்கள் பெயர் சேர்த்தல், நீக்கல் மற்றும் திருத்தம் செய்யும் பணி வருகின்ற 15.09.2016 முதல் 14.10.2016 வரை நடைபெறுகின்றது. இதன் ஒரு பகுதியாக 15.09.2016 அன்று காலை 10.30 மணியளவில் புதுச்சேரியிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளுக்கு வரைவு வாக்காளர் பட்டியல் நகலினை புதுச்சேரி மாவட்டத் தேர்தல் அதிகாரி அவர்கள் வழங்கினார். இந்த வரைவு வாக்காளர் பட்டியலின்படி புதுச்சேரி மாவட்டத்தில் மொத்தம் 7,76,484 வாக்காளர்கள் (ஆண் வாக்காளர்கள் - 3,69,461, பெண் வாக்காளர்கள் - 4,06,963, மூன்றாம் இனம் - 60) உள்ளனர். இந்த பணியின்போது, வாக்காளர்கள் தங்களின் பெயர் தற்போதைய வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ளதா என்பதை அறிந்து கொள்வதற்கு ஏதுவாக வரைவு வாக்காளர் பட்டியல் அந்தந்த தொகுதிக்குட்பட்ட வாக்குச் சாவடி மையங்களில் பொது மக்கள் பார்வைக்காக வைக்கப்படும். அப்பொழுது பொதுமக்கள் வாக்காளர் பட்டியலில் தங்கள் பெயரை சரி பார்த்துக்கொள்ளலாம். மேலும், புதியதாக 18 வயது பூர்த்தி அடைந்தவர்கள், தங்கள் பெயரை வாக்காளர் பட்டியலில் சேர்த்துக் கொள்ளலாம். ஏற்கனவே பட்டியலில் இடம் பெற்றுள்ள வாக்காளர்கள் தங்கள் பெயர், முகவரி போன்றவற்றில் ஏதேனும் பிழை இருப்பின் அவற்றை திருத்தம் செய்யவும், இடமாற்றம் போன்ற நிகழ்வுகளில் புதிய தொகுதியில் தங்கள் பெயரை சேர்ப்பது போன்ற மாற்றங்களை செய்துகொள்ளலாம். இதற்காக ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் ஒரு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். மேலும், பொதுமக்கள் வரைவு வாக்காளர் பட்டியலை www.ceopuducherry.py.gov.in என்ற இணையதளத்திலும் காணலாம். ஆகவே பொதுமக்கள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

15/9/16

(Dr. சத்யேந்திர சிங் துர்சாவாத், இ.ஆ.ப.)
மாவட்டத் தேர்தல் அதிகாரி

# புதுச்சேரி மாவட்டத்தில் தொகுதி வாரியான வாக்காளர் விவரம்

| தொகுதியின் எண்ணும் பெயரும் | | ஆண் | பெண் | மூன்றாம் இனம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| புதுச்சேரி மாவட்டம் | | | | | |
| 1 | மண்ணாடிப்பட்டு | 14232 | 15677 | 1 | 29910 |
| 2 | திருபுவனை | 14060 | 15543 | 0 | 29603 |
| 3 | ஊசுடு | 13397 | 14813 | 1 | 28211 |
| 4 | மங்கலம் | 16731 | 18039 | 8 | 34778 |
| 5 | வில்லியனூர் | 17797 | 18871 | 1 | 36669 |
| 6 | உழவர்கரை | 17926 | 19264 | 0 | 37190 |
| 7 | கதிர்காமம் | 15355 | 16449 | 2 | 31806 |
| 8 | இந்திரா நகர் | 15955 | 17404 | 0 | 33359 |
| 9 | தட்டாஞ்சாவடி | 13873 | 15387 | 3 | 29263 |
| 10 | காமராஜ் நகர் | 16142 | 16749 | 2 | 32893 |
| 11 | இலாசுபேட்டை | 14612 | 15452 | 2 | 30066 |
| 12 | காலாப்பட்டு | 15059 | 16133 | 1 | 31193 |
| 13 | முத்தியால்பேட்டை | 13591 | 14881 | 6 | 28478 |
| 14 | ராஜ்பவன் | 11903 | 13505 | 1 | 25409 |
| 15 | உப்பளம் | 12251 | 14338 | 5 | 26594 |
| 16 | உருளையன்பேட்டை | 11249 | 12658 | 8 | 23915 |
| 17 | நெல்லித்தோப்பு | 14927 | 16416 | 0 | 31343 |
| 18 | முதலியார்பேட்டை | 15963 | 16944 | 1 | 32908 |
| 19 | அரியாங்குப்பம் | 16985 | 18765 | 11 | 35761 |
| 20 | மணவெளி | 14754 | 16337 | 4 | 31095 |
| 21 | ஏம்பலம் | 14607 | 16658 | 0 | 31265 |
| 22 | நெட்டப்பாக்கம் | 14188 | 16397 | 1 | 30586 |
| 23 | பாகூர் | 12963 | 14884 | 2 | 27849 |
| 29 | மாஹி | 13409 | 16400 | 0 | 29809 |
| 30 | ஏனாம் | 17532 | 18999 | 0 | 36531 |
| | **மொத்தம்** | **369461** | **406963** | **60** | **776484** |